# 8.3 காணாமல் போன பணப்பை

## I. விடை தருக:

காணாமல் போன பணப்பை கதையில் நீ விரும்பிய கதைமாந்தர் யார்? அவர்ப் பற்றி ஐந்து வரிகளில் எழுதுக.

Answer:

- இக்கதையில் நான் விரும்பிய கதைமாந்தர் மூதாட்டி.
- மூதாட்டி நினைத்திருந்தால் அப்பணப்பையை அவளே எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் நேர்மையாக சிற்றரசரிடம் ஒப்படைத்துள்ளார்.
- அம்மூதாட்டியின் நேர்மைக்குக் கிடைத்த பரிசுதான் அப்பணப்பை.
- இச்செயலால் எனக்கு இம்மூதாட்டியைப் பிடிக்கும்.\

2. வணிகனுக்குச் சிற்றரசன் எவ்வாறு பாடம் கற்பித்தார்?

Answer:

வணிகன் பணம் குறைகிறது என்று பொய் சொன்னதை அறிந்து கொண்ட அரசன், "வணிகனே உன் பையில் இப்போது இருப்பதைக் காட்டிலும் அதிகமாகப் பணம் இருந்தது இல்லையா? எனவே, இது உன் பை இல்லை; வேறு யாருடையதோ தெரியவில்லை. பணத்திற்குச் சொந்தக்காரன் வந்து கேட்கும் வரை என்னிடமே இருக்கட்டும். நீ இவ்விடத்தைவிட்டுப் போகலாம்" என ஆணையிட்டார்.